RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS

# துறவு வாழ்க்கையல்ல வரம்: மணிமேகலை குறித்த ஒரு தத்துவார்த்த வாசிப்பு

அ. சதீஷ்குமார் [அ, *], த. முத்தமிழ் [அ]

[அ] தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை-09, தமிழ் நாடு, இந்தியா

# Renunciation as a Blessing: A Philosophical Reading of Manimekalai

A. Sathishkumar [a, *], D. Muthamil [a]

[a] Department of Tamil, Thiagarajar College, Madurai-09, Tamil Nadu, India

* Corresponding Author: tamilabi555@gmail.com

**ABSTRACT**

Thousands of years have passed since the emergence of the world, and human beings and language are believed to have emerged alongside the development of human civilization. Humanity, as a part of nature, ought to have existed with the responsibility of protecting other living beings and preserving the natural resources of the earth. However, human beings have increasingly utilized the world's living beings and natural resources for their own needs. Human life may be compared to the course of a river. From the moment of birth, human life begins as a small stream and gradually develops into a river. When obstacles arise, the river does not remain stagnant; instead, it transforms those obstacles into sources of strength and continues its journey. As it flows, it enriches the lands through which it passes and ultimately reaches its destination. Likewise, human beings should overcome difficulties and obstacles in order to fulfil the purpose of human birth. The true purpose of human existence, according to this perspective, is not merely individual advancement but the protection of living beings and the preservation and enrichment of the earth, mountains, ponds, rivers, and other natural resources. Human progress lies in performing one's ethical responsibilities, protecting life, and contributing to the welfare of the world without being defeated by obstacles. Achieving this ideal does not necessarily require abandoning worldly life or withdrawing completely from society. Rather, an individual can transcend the limitations of ordinary existence by thinking as a human being and living according to virtue (aram). Such an ethical approach represents an important dimension of Tamil philosophical thought, which emphasizes responsibility toward other living beings and the natural world. In this context, Manimekalai provides an important philosophical framework for understanding renunciation (thuravu). The work presents renunciation not simply as physical withdrawal from worldly life but as a higher ethical and spiritual state grounded in compassion, virtue, detachment, and service to living beings. This article therefore examines the concept of renunciation as a blessing in Manimekalai from a philosophical perspective. It explores how the text connects renunciation with the purpose of human life, ethical action, compassion, protection of living beings, and social responsibility, thereby highlighting the distinctive philosophical significance of Tamil ethical thought.

**Keywords:** Human Civilization, Humanity, Manimekalai, Virtue

## முன்னுரை

உலகம் தோன்றிய நாளது முதல் இன்று வரை பல்லாயிரக்கணக்கான உயிர்கள் தோன்றி மடிந்துள்ளன. அவற்றின் பிறப்பு குறித்து எங்கும் பேசப்படுவதும் கிடையாது. அவ்வுயிர்கள் எல்லாம்

தன் தேவையை பூர்த்தி செய்வதிலும், தன்வழித் தோன்றல்களையும், அவர்களுக்குச் சொத்து சேர்ப்பதிலும் சிந்தனை இருந்ததே தவிர, பிற உயிர்களின் மேம்பாடு குறித்து எவ்வித சிந்தனையும் இல்லாமல் வாழ்ந்தவை ஆகும். பிற உயிர்களின் மேம்பாடு பற்றி சிந்தித்து, தனக்கென வாழாத வாழ்க்கை வரலாறாக மாறியது. அவ்வாழ்க்கையையே போற்றி புரந்தனர். பிற்காலத்தில் சான்றோர்கள் அதனைத் துறவு என்றும் அழைத்தனர். அத்துறவு வாழ்வினைப் பற்றி மணிமேகலையில் இடம்பெறும் பெண் துறவிகள் சார்ந்தக் கருத்தினை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## துறவு விளக்கம்

துறவறம் என்பது உலகப் பற்றை விடுத்த தவ வாழ்வாகும். இதனைச் சந்நியாசம் எனவும் கூறுவர். "துறவி என்பவர் பதவி, பாசம் முதலியவற்றை வெறுத்து நீக்குபவர்"1 ஆவா. "துறவறம் என்பது துறவிகளுக்குரிய விதி. துறவர் முனிவர், துறவி - சன்னியாசி, துறவு சன்னியாசம் இரகசியம். துறவியர்க்கு விதித்துள்ள அறம் என்றும் பொருள்படும்" 2 "இது இல்லறந் துறத்தல். என்பதை வலியுறுத்துவதாகும்" 3 "இல்லற இன்பத்தைத் துய்த்தறியாதும், துய்த்தும் உலக வாழ்க்கையில் அல்லது பிறவித் துன்பத்தில் வெறுப்பும் அல்லது பேரின்பத் துய்ப்பில் வேட்கையுங் கொண்டு மாணியப் (பிரமசரிய) பருவத்திலேனும், மனையற நிலையிலும் முறியன் (தபுதரன்) நிலையிலேனும், மூப்புலேனும் துறவு பூண்டு அதற்குரிய அறங்களைக் கடைபிடித்து நான். என்னும் இருவகைப் பற்றையும் விட்டு, பிறவியினின்று விடுதலைப் பெறுவதே துறவு ஆகும் என்பர்"4

இல்வாழ்க்கையின் முடிந்த பயனாகத் துறவறம் குறிப்பிடப்படுகின்றது. இந்நெறி ஆடவர், பெண்டிர் இருபாலருக்கும் ஏற்ற நல்துணையாம் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து இச்சைகள் எல்லாம் நீங்கி, வீட்டின்பம் பெறுதற்கு ஏதுவாகிய துறவு மேற்கொள்ளுதலே வாழ்வின் முடிந்தப் பயனாவதை.

"காமம் சான்ற கடைக்கோட் காலை

ஏமம் சான்ற மக்களொடு துவன்றி

அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்

சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" 5 என்று தொல்காப்பியம் குறிப்பிடக் காணலாம். புறப்பொருள் வெண்பாமாலை துறவியரின் பண்புகளையும், தோற்றத்தையும் பின்வறுமாறு.

"நீர் பலகால் மூழ்கி நிலத்தசை இத் தோலுடையாச்

சோர்சடை தாழச் சுடரோம்பி - ஊரடையார்

கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்

வானகத்து உய்க்கும் வழி" 6

எனக் குறிப்பிடுகின்றது. நீரில் பலமுறை மூழ்குதலும், நிலத்தில் துயிலுதலும், தோலுடுத்தலும், சடை வளர்த்தலும், சுடரொம்புதலும், ஊருள் செல்லாதிருத்தலும், காட்டிலுள்ள கனி முதலியவற்றையே உண்ணல், கடவுளை வழிபட்டு விருந்தோம்புதல் போன்றவை துறவு நெறியின் இயல்புகளாகும், அந்நெறி நோற்பார் கைக்கொள்ள வேண்டிய இயல்புகளையும் திருவள்ளுவர் துறவு என்னும் அதிகாரத்தில் கூறியுள்ளார். துறவியரின் இயல்பினை

"இயல்பாகும் நோன்பிற் கொன்றின்மை உடைமை

மயலாகும் மற்றுப் பெருக்கு" 7

என்று உரைகின்றார். தவத்தின் இயல்பு யாதெனின் உலகப் பொருள் எதனையும் பற்றாமை ஆகும். ஒரு பொருள்மீது ஆசை ஏற்படின், அது எல்லாப் பொருட்களிலும் தொடரும். இவ்வுலகப் பற்றுக்களை விட்டு வாழ்வது நல்லது என்றும், பற்றுவிடுதலே பயனாகியத் துறவு என்றும் திருக்குறள் வலியுறுத்துகின்றது.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு" 8

இளமையிலே துறவு மேற்கொள்வதே சிறந்ததாகும். நாலடியாரும் இதனை, இளமைப்பருவம் வீணாகச் சென்றப் பின்பு நோயோடு முதுமைப்பருவம் வரும். எனவே புலன்களின் வழிச் செல்லுகின்ற மனத்தைத் தடுத்து நிறுத்தி இளமையிலே துறவறம் மேற்கொள்ள வேண்டும் என்பதை.

"கொன்னே கழிந்தன் றிளமையும் னே

பிணியொடு மூப்பும் வருமால் துணிவொன்றி

என்னொடு சூழா தெழுநெஞ்சே போதியோ

நன்னெறி சேர நமக்கு"9

துன்பம் நிறைந்த இவ்வுலக வாழ்வில் இளமையிலே துறவு மேற்கொள்பவர் அறிவுமிக்கவர்கள் என நாலடியார் வழியாகத் துறவின் சிறப்பினையும் அறிய முடிகின்றது.

துறவு நிலையின் சிறப்பை மணிமேகலையில் காணப்படக்கூடிய மணிமேகலை. மாதவி, விசாகை, சுதமதி போன்ற பாத்திரப் படைப்பை மையப்படுத்தி இங்கு ஆய்வு செய்யப்படுகிறது

## மணிமேகலையின் துறவு

மணிமேகலை தானம் பலவும் செய்துத் துறவினை மேற்கொண்டுத் தன் அழகிய கோலத்தை நீக்கினாள். புகார் நகரத்தில் தீவகச் சாந்தி விழாவில் கலந்து கொள்ள மாதவியும், மணிமேகலையும் வராமையால் ஊராரின் பழிச்சொல்லுக்கு ஆளாகினர். மாதவி வயந்தமாலையிடம் மணிமேகலை கண்ணகியின் மகளாக விளங்குபவள். அவள் "தீத்தொழில் படா அள்" என்கின்றாள்.

உலக வாழ்வினை முற்றும் துறந்த மணிமேகலையின் துறவற வாழ்க்கையிலும் இளவரசன் உதயகுமரன் மூலமாகத் தொடர்ந்து, இடையூறு வந்தப் போது மணிமேகலாத் தெய்வம் அவளைக் காப்பாற்றுகின்றது. உதயகுமரன் மேல் அன்பு ஏற்பட்டபோது மணிமேகலையை மணிபல்லவத் தீவிற்குக் கொண்டு சென்றுப் பழம்பிறப்பினை உணர்த்துகின்றது. இந்நிகழ்ச்சி மூலமாகத் துறவு மேற்கொண்டவர்கள் ஐம்புலன்களையும் அடக்கி வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றக் கருத்தினை வலியுறுத்துகின்றது. மணிமேகலையின் துறவு வாழ்க்கைப் பாதை மாறாமல் இருக்க மணிமேகலா தெய்வம் உதவி புரிகின்றதைக் காணலாம்.

மணிமேகலை புத்தப் பாத பீடிகையை வணங்கித் தன் முற்பிறப்பின் வரலாற்றை அறிந்தப் பின்னர், மணிமேகலா தெய்வம் மூலமாக மூன்று மந்திரங்களைப் பெறுகின்றாள். தீவதிலகை மூலமாகக் கோமுகிப் பொய்கையில் எழுந்த அமுதகரபியைப் பெற்று உணவு தானமே உயரிய தானமென உணர்ந்து அறவண அடிகளிடம் சென்றுத் தனக்கு ஏற்பட்ட நிகழ்வுகளைக் கூறுகின்றாள். அறவணவடிகள் மணிமேகலைக்கு நல்லறங்களை எடுத்துக் கூறி

"ஆருயிர் மருந்தாம் அமுத சுரபியெனும்

மாபெரும் பாத்திரம், மடக்கொடி! பெற்றனை

மக்கள் தேவர் எனவிரு சார்க்கும்

ஒத்த முடிவின் ஓரறம் உரைக்கேன்

பசிப்பிணி தீர்த்தல் என்றே அவரும்

தவப்பெரு நல்லறம் சாற்றினர்" (அறவணர்த்தொழுத காதை: 114-119)

பாத்திரத்தினை நீ இப்போது பெற்றாய், மக்கள், தேவர் என்ற இரு சாரார்க்கும் ஒத்த முடிவினையுடையதான ஒப்பற்ற அறம் பசிநோயினைப் போக்குவது ஆகும். என அறவண அடிகள் நல்லறத்தினை மணிமேகலைக்கு உணர்த்தினார்.

துறவறத்தின்கண் மனதினைச் செலுத்திய மணிமேகலை காஞ்சிநகர் சென்று அறவணவடிகளிடம் மெய்ப்பொருள் உரைக்குமாறு வேண்டினாள். மெய்ப்பொருளை உணர்ந்த பின், தானஞ் செய்தலை மேற்கொண்டு சீலங்களில் சிறப்பாக நிலை பெற்றிருந்தாள். 'புத்தனும், தன்மமும், சங்கமும்' என்னும் முத்திற மணிகளையும் மன, மொழி, மெய் என்னும் மும்மையினாலும் வணங்கிப் புத்தச் சங்கமே தனக்குப் புகலிடமாகக் கொண்டு அறவணவடிகளின் ஞானதீபத்தை நன்முறையில் பெற்று, தவநெறிக்குரிய மரபுகளையும் பெற்று பல்வகைத் தருமங்களையும் கேட்டு,

"தவத்திறம் பூண்டு தருமங் கேட்டுப்

பவத்திறம் அறுக எனப் பாவை நோற்றனள்" (பவத்திறம் அறுகெனப்பாவை நோற்ற காதை: 50)

நோன்பினை ஏற்றவளாகப் புத்தப் பள்ளியை அடைந்தாள். உதயகுமரன் விரும்பிய அழகு தனக்கு வேண்டாம் என்று தலையை மழுங்க அடித்து, புத்த பிக்குணியான மணிமேகலை, துறவிற்கு மனிதர்களால் பேதமில்லை என்பதும். கணிகையர் குலத்தைச் சார்ந்தவளுக்கும் ஞானம் அளிக்கப்படும்; ஞான நெறியாகிய துறவே இறையாண்மை நெறிக்கு வழியென உணர்த்துகின்றாள். துறவு பூண்ட மணிமேகலை தவப்பள்ளியில் உறையாது. நகரில் வலம் வந்து மக்களுக்கு உதவும் எண்ணம் கொண்டவளாகக் காணப்படுகின்றாள். மணிமேகலையை உதயகுமரனுக்கு மணஞ்செய்து வைக்க உறுதிகொண்ட சித்திராபதியும், தன்னைத் துரத்துகின்ற உதயகுமரன் இவர்கள் முன்னிலையில் தன்

துறவறத்தின் மீது மணிமேகலை உறுதியாக நின்றது மகத்தான செயலாகும். "அறியாமையைப் போக்கித் துன்பத்தின் இருப்பையும் அவற்றின் மூல காரணங்களையும் அறிந்து கொண்டு அவற்றை நீக்கும் வழிகளெனப் பௌத்தம் போதிக்கும் முறைகளைக் கையாண்டு பிறவாப்பெருநெறி உய்வதையே பௌத்தம் வலியுறுத்தி நிற்கிறது".

மணிமேகலை, பரந்த தொண்டினைச் சிறந்த முறையில் செய்து முடிக்கத் துறவுபோல் துணை நிற்பது வேறில்லை என்பதை உணரச் செய்கின்றாள். அக்காலத்தில் பெண்களுக்குத் துறவு கொள்ளும் உரிமையைக் கொடுத்தது பௌத்தமேயாகும். இதற்குச் சான்றாக மணிமேகலை திகழ்கின்றாள். தனிவாழ்க்கை தானாகவே அமைந்து விட்ட கன்னிப் பெண்களும் தயங்காது தொண்டாற்ற முன்வரலாம் என்பதைக் காட்டுகின்றது.

## மாதவியின் துறவு

கணிகையர் குலத்தில் பிறந்து, நடனக் கலையில் சிறந்து விளங்கிய மாதவி, கோவலனைப் பிரிந்த பிறகு நடனத்தைத் துறந்து துறவியானது குறித்து ஊரார் அலர்தூற்றுவதாக வயந்தமாலை கூறக்கேட்ட மாதவி தான் கணிகையர் குலத்தில் தோன்றினாலும் கற்புடையவளாகவே வாழ விரும்புவதை.

"காதலன் உற்ற கடுந்துயர் கேட்டு

போதல் செய்யா உயிரொடு நின்றே

பொன் கொடி மூதூர்ப் பொருளுரை இழந்து

நல்தொடி நங்காய்! நாணுத் துறந்தேன்" (ஊரலர் உரைத்த கதை: 37-40)

என்றாள். கோவலன் கொலையுண்டதனைக் கேள்வியுற்றும் என் உயிர் உடலை விட்டு நீங்கவில்லை; மக்கள் என்னைப் புகழ்ந்துரைத்த பெருமையினை இழந்து, நாணத்தையும் விட்டவளானேன்; கணவனை இழந்த கைம்பெண்டிர் கடைப்பிடிக்கும் மூன்று விதமான விரதங்களைக் கூறி (ஊரலர் உரைத்த காதை வரி 41-47) அவற்றினும் சிறந்த நெறியைக் கடைப்பிடித்தக் கண்ணகியைப் புகழ்ந்து பேசுகின்றாள் மாதவி. (ஊரலர் உரைத்த காதை வரி 48-55) நடனக் கணிகையர் குலமே மறைந்தொழிய வேண்டும் என்ற விருப்பத்தால், தான் துறவு கொண்டதோடு தன் மகள் மணிமேகலையை மாபத்தினியாம் கண்ணகிக்கு வாரிசாக்கின்றதையும் அறிய முடிகின்றது.

புத்தமதத் துறவியர் உறையும் இடத்திற்குச் சென்று மெய்யறிவுடையவரான அறவண அடிகளின் திருவடி மீது வீழ்ந்து கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் ஐவகைச்சீலங்களை உணர்ந்து உலக வாழ்வினைத் துறந்து, கூந்தலையும் களைந்து புத்த மடத்தில் சேர்ந்து துறவு வாழ்வை மேற்கொள்கிறாள்.

வயந்தமாலை. மாதவியின் கலைத்திறன்கள் அனைத்தையும் அவளுக்கு நினைவு படுத்துகின்றாள். அதன் மூலம் பழைய வாழ்விற்குத் திரும்பலாம் என நினைக்கின்றாள். ஆனால் மாதவியோ துறவில் உறுதியாக நின்று, இவ்வுலகில் பிறந்தவர்கள் அடைந்துள்ள துன்பங்கள் மீண்டும் அடையாத நிலையினர் எவரோ அவர் அடைவதே மிகப்பெரிய இன்பமாகும் என்கிறாள். மாதவி தன் தோழியாகிய சுதமதியுடன் அறவண அடிகளைக் காணச் செல்கின்றாள். அறவண அடிகளின்,

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்

பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்

பற்றின் வருவது முன்னது பின்னது

அற்றோர் உறுவது அறிக"

(ஊரலர் உரைத்த காதை:64-67) எனும் உரிய போதனையை ஏற்றுக் கொண்டு புத்தப் பெருமானின் புகழ் பாடித் தவக்கோலம் பூண்டு வாழ்ந்தாள்.

## விசாகையின் துறவு

தருமதத்தன் என்பவனின் மாமன் மகளான விசாகை தருமதத்தனுடன் காந்தருவ மணவினைக்கு இசைந்தனள் என்பதால் ஊர் முழுவதும் அவளைக் குறித்துப் பழிச் சொற்கள் எழுந்தன. அவள் சம்பாபதிக் கோட்டத்தில் சென்று தனக்குற்றப் பழியை நீக்க வேண்டி கந்திற்பாவையிடம் முறையிட்டாள். அத்தெய்வம் விசாகை குற்றமற்றவள் என ஊரார்க்கு உரைத்தது. விசாகை தன்

தாயிடம் இப்பிறப்பில் நான் மணம் புரிந்து கொள்ள மாட்டேன் எனக்கூறி. மறுபிறப்பில் எனது மைத்துன்னையே மணப்பேன் என்று கூறி கன்னிமாடம் புகுந்து

"மைத்துனன் மனையாள் மறுபிறப் பாகுவேன்

இப்பிறப் பிவனொடுங் கூடேன் என்றே

நற்றாய் தனக்கு நற்றிறஞ் சாற்றி

மற்றவள் கன்னி மாடத்து அடைந்த பின்" (சிறைசெய் காதை: 97-100)

தவவாழ்க்கை மேற்கொண்டாள். மணமின்றி கன்னியாகவே இருந்து, அறிவுப் பக்குவத்தினாலே முதிர்ச்சியடைந்தவளாகக் காணப்பட்டாள் விசாகை, தன் மீது வந்தப் பழிச் சொற்களைக்களைய இல்லற வாழ்வு வேண்டாம் என உறுதி பூண்டு தவவாழ்க்கை வாழ்ந்த விசாகை, தருமத்தனுடன் சேர்ந்து நல்லறங்கள் பலவும் செய்தாள்.

## சுதமதியின் துறவு

சுதமதியின் தந்தையையும், சுதமதியையும் சமண முனிவர்கள் சமணப்பள்ளியை விட்டு வெளியேற்றினர். சங்கதருமன் என்னும் பௌத்த முனிவன் இருவரையும் புத்த சங்கத்தில் சேர்த்து புத்த தருமத்தை அவர்களுக்கு அருளிச் செய்தான். "மக்கட்குலம் அனைத்தும் தம் துயரங்களினின்றும் நீங்கி இன்பச் செய்தியினை அடைவதற்கு ஏற்ற அறத்தினையுடைய தர்மச் சக்கரத்தினை உருளச் செய்தவனாகிய புத்த பெருமானின் சிறப்பினை,"

"பொன்னின் திகழும் பொலம்பூ அடையன்

என்னுற் றனிரோ என்றெமை நோக்கி

அன்புடன் அளைஇய அருண்மொழி யதனால்

அஞ்செவி நிறைத்து நெஞ்சகம் குளிர்ப்பித்துத்

தன்கைப் பாத்திரம் என்கைத் தந்து ஆங்கு

எந்தைக் குற்ற இடும்பை நீங்க

எடுத்தனன் தழீஇக் கடுப்பக் தலையேற்றி

மாதவர் உறைவிடம் காட்டிய மறையொன்

சாதுயர் நீக்கிய தலைவன் தவமுனி

சங்க தருமம்" (மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை:61-70)

என்னும் பாடல் வரிகளில் கூறியுள்ளதைக் காணலாம். சங்கதருமன் தன் கையிலிருந்து பிச்சைப் பாத்திரத்தினைச் சுதமதியின் கையில் கொடுத்து பிறரின் துன்பம் நீங்குமாறு செய்தான். புத்த நெறியைப் பின்பற்றிய சுதமதி மாதவியுடன் சேர்ந்து அறவண அடிகளிடம் உபதேசம் பெற்றதை

"ஆங்கவர் தம்முடன் அறவண அடிகள்

யாங்குளர் என்றே இளங்கொடி வினா அய்

நரைமுதிர் யாக்கை, நடுங்கா நாவின்

உரைமூ தாளன் உறைவிடம் குறுகி

கைம்பலர்க் குழலி மாதவன் திருந்தடி

மும்முறை வணங்கி, முறையுளி ஏத்தி" (அறவணர்த்தொழுத காதை:1-6)

என்னும் பாடல் வரிகளால் அறியலாம். சுதமதி மாதவியுடன் சேர்ந்து, அறவணர் தங்கியிருக்கும் இடத்தை அடைந்து முறைப்படி போற்றித் துதித்தனர். மேலும், முற்பிறப்பில் வீரையாகிய சுதமதி நன்னெறியில் செல்லும் பேற்றையும் எய்தினாள் என்பதை

"ஓங்குயர் போதி உரவோன் திருந்தடி

தொழுதுவலங் கொண்டு, தொடர்வினை நீங்கிப்

பழுதில் நன்னெறிப் படர்குவர் காணாய்"(ஆபுத்திரன் திறன் அறிவித்த கதை: 111-113)

என்னும் பாடல் வரிகளால் அறியலாம். இல்லற வாழ்வினைத் துறந்த சுதமதி. மாதவி, மணிமேகலையுடன் புத்தமத நெறிகளைக் கடைபிடித்துத் தவ வாழ்க்கையை மேற்கொண்டார்கள். உலக வாழ்வினைத் துறந்து, இத்தவ வாழ்வினை நெறிப்படுத்தும் மேம்பட்டச் சிந்தனை மகளிர் பாத்திரப் படைப்புகளின் மூலம் எடுத்துரைக்கின்றது.

## முடிவுரை

பிரபஞ்சத்தின் ஆற்றல் எல்லை இல்லாதது. இப்பிரபஞ்சம் வேண்டுவனவற்றை எல்லாம் கொடுக்கக்கூடியது. அதனைத் தனக்குள் அடக்கி ஆளும் ஆற்றலைப் பெற வைப்பதே இத்துறவின் மேன்மையாகும். எல்லாவற்றையும் பெற்று ஆண்டு அனுபவித்து விட்டுச் செல்லுவது துறவாகாது. இளமைக்காலத்திலிருந்து தான் பெற வேண்டிய இன்பத் துன்பங்களை விட்டு விலகிச் செல்வதே உண்மையான துறவாக இருக்கும். இவ்வகையில் வாழ்ந்த நம் தமிழ்ச் சான்றோர்களான ஔவையார் தொடங்கி அப்துல் கலாம் ஐயா வரையுள்ள அனைவரது வாழ்வையும் துறவாகப் பார்க்காமல், மானுட சமுதாயதிற்கு கிடைத்த வரமாகவே பார்க்கப்படுகிறது.

## References

மணிமேகலை முதன்மையான நூல்

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி,

திருமகள் தமிழகராதி, திருமறை உரைமணி

மதுரைத் தமிழ்ப் பேரகராதி,

தேவநேய பாவாணர், திருக்குறள் தமிழ் மரபுரை,

தொல். கற்பு

புறப் - வெண்பா

திருக்குறள்

நாலடியார்

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License